பக்கங்கள்: 11 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 22 புதன்கிழமை 06.07.2022 கதிர் 243

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியலைப் பொறுத்த வரை மிக முக்கியமான வழக் கொன்று இன்று உயர்நீதிமன் றுக்கு வருகின்றது.

மிருசுவிலில் எட்டு அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியா கக் காணப்பட்டு, ☞2

## ரயில் சேவை குழப்பத்தில்



ரயில்போக்குவரத்து சேவை யாளர்களில் சிலர் நேற்று மாலை முதல் பணிப்புறக் கணிப்பை ஆரம்பித்துள்ள னர்.

ரயில்வேத் திணைக்களம் முறையற்ற வகையில் சேவை யாளர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதாக குற்றம் சுமத்தி இந்தப் பணிப்புறக் கணிப்பை அவர்கள் முன்னெ டுத்துள்ளனர்.

பணியாளர்கள் முன்னெ டுத்துள்ள ஆர்ப்பாட்டம் கார ணமாக நேற்று மாலை இடம் பெறவிருந்த அலுவலக ரயில் சேவைகளுக்கும் பாதிப்பு ஏற் பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் ☞2

# சாவின் விளிம்பில் பொருளாதாரம்!

## பணவீக்க நெருக்கடியிலிருந்து இலங்கை மீளுவது அசாத்தியம்

**கொழும்பு, ஜூலை 06**

**மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை சமீபத்திய காலங்களில் சந்தித்து வருவதாகவும், இலங்கையின் பணவீக்கத்தை அவதா னிக்கும் போது நாட்டின் பொருளாதார மானது மரணத்தின் விளிம்பில் இலங் கையை கொண்டு சென்றுள்ளது என வும் அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.** ☞2



## வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சரவைக் குழு!

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு மீண்டும் ஸ்தாபிக் கப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

ஜனாதிபதியின் தலை மைத்துவத்தின் கீழ் 7 குழு உறுப்பினர்களின் பங்கேற் புடன் இந்தக் குழுவை நிறு வுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீன்வளத் துறை அமைச்சர், போக்கு வரத்து மற்றும் நெடுஞ் சாலைத்துறை அமைச்சர், விவசாய அமைச்சர், பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர், மின்சக்தி மற் றும் எரிசக்தி அமைச்சர், வர்த்தகம்,வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ☞2

## எரிவாயுக் கப்பல் வருகை தாமதம்

3,724 மெட்ரிக் தொன் எரிவாயுவுடன் இலங்கை வரவிருக்கும் கப்பலலின் வருகை மேலும் தாமதம டையக்கூடும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரி வித்துள்ளது.

இன்றக்கும் நாளை ☞2

## மண்ணெண்ணெயின் விலை எதிர்வரும் நாள்களில் எகிறும்

எதிர்வரும் நாள்களில் மண்ணெண்ணெய் விலையை கட்டாயம் அதிகரிக்க வேண்டியேற்படும் எனஅமைச்சர்காஞ்சனவிஜேசேகரதெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ☞2

# எரிபொருள்களுடன் ஏழு கப்பல்கள் அடுத்த வாரங்களில் வருகின்றனவாம்

## நேற்று நாடாளுமன்றத்தில் அரசு தகவல்

எரிபொருள்களுடன் ஏழு கப்பல்கள் அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு வரவுள்ளன என சுற்றுலாத் துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர் –

40 ஆயிரம் மொற்றி தொன் டீசல் எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் வரும். மசகு எண்ணெயை ஏற்றிய கப்பல் 10 ஆம் திகதிக்கும் 11 ஆம் திகதிக்கும் ☞2



## எட்டி உதைத்த கேணல் உடனே இடைநிறுத்தம்!



குருநாகல், யக்கபிட்டியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொது மகன் ஒருவரை எட்டி உதைத்த இரா ணுவ அதிகாரி அனைத்து கடமைக ளில் இருந்தும் இடைநிறுத்தப் பட்டுள்ளார் என இலங்கை இரா ணுவம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரை சம்பந்தப்பட்ட லெப்டினன்ட் கேணல் அனைத்துப் பொறுப் புகளில் இருந்தும் இடைநிறுத் தப்பட்டுள்ளார் என இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி ☞2

## கட்டுநாயக்கவில் விமானம் கொள்கலன் மோதிச் சேதம்



கட்டுநாயக்கவிமானநிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட துருக்கி விமா னம் கொள்கலன் மோதி சேதமடைந் துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு கட்டு நாயக்க விமான நிலையத்தில் இருந்து துருக்கி நோக்கி புறப்படவி ருந்த ஏ 330 - 300 ஏயார் பஸ் வகை யைச் சேர்ந்த விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரிலி ருந்து பொருள்களை ☞2

## ஏ.எல். பரீட்சையின் திகதிகள் அறிவிப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி வரையில் இடம்பெறுவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 5 ஆம் தரப் புலம. பரிசில் பரீட்சை நவம் பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெறும் என தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரம் மற்றும் மே மாதங்க ளுக்கு உட்பட்ட காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

## மொட்டையான ஆயுதங்களினால் தாக்கப்பட்டு முழு உடலும் காயம்

### கந்தக்காட்டுக் கைதிக்கு நேர்ந்த அவலம்

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த கைதியின் பிரேத பரிசோ தனை நேற்றுப் பொலன்னறுவை மாவட் டப் பொது வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

மொட்டையான ஆயுதங்களால் தாக் கப்பட்டதன் மூலம் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டமையால் கைதி உயிரி ழந்துள்ளார் எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 29 ஆம் திகதி கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் கைதி ஒருவர் சந் தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த மையால் அங்கு பெரும் பதற்றமான சூழல் ஏற்பட்டது. ☞2

## நெல் செய்கைக் கடனை தள்ளுபடி செய்கிறது அரசு

நெல் விவசாயிகளி னால் பெறப்பட்டு செலுத் தப்படாத விவசாயக் கட னைத் தள்ளுபடி செய்ய அமைச்சரவையில் முன் வைக்கப்பட்ட யோச னைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ☞2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கனிஷ்ட அதிகாரியான சுனில் ரத்நாயக்காவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு அளித்து விடுவித்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு இன்று மன்றில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் யஸந்த கோட்டாகொட, தெல்தெனிய ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன்னால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு இன்று பரிசீலிக்கப்பட இருக்கின்றது.

நீதிமன்றம் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் இன்று முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வழக்கிற்கு முன்னர் இதே போன்ற விடயத்தை ஒட்டிய வழிகாட்டல் வழக்காக துமிந்த சில்வாவுக்கு எதிரான வழக்கு உள்ளது. பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர எம்.பி. படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவை இதே போல ஜனாதிபதி மன்னித்து விடுவித்து இருந்தார். அதற்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீதான விசாரணை முடிவடையும் வரை ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பு உத்தரவுக்கு இடைக்காலத்தடை உத்தரவு வழங்கும்படி மனுவில் கோரப்பட்டது. அந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், அச்சமயம் அந்த இடைக்காலத் தடை உத்தரவையும் வழங்கியமை அடுத்து துமிந்த சில்வா திரும்பவும் கைது செய்யப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இப்போது இன்று நீதிமன்றத்தில் எடுக்கப்படும் சுனில் ரத்நாயகாவுக்கு எதிரான வழக்கிலும் இதே போன்ற இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே துமிந்த சில்வா வழக்கில் அந்த இடைக்காலத் தடை உத்தரவை வழங்கிய மூன்று நீதியரசர்கள் ஆயத்தில் ஒருவராக இருந்த நீதியரசர் கோட்டாகொட இன்றைய வழக்குக்கான ஆயத்திலும் இடம்பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மனுவை உயர்நீதிமன்றம் இன்று விசாரணைக்கு ஏற்பதோடு சுனில் ரத்நாயக்காவுக்கு வழங்கிய பொது மன்னிப்பை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு வழங்குமானால அவரும் துமிந்த சில்வா மாதிரி மீண்டும் சிறைக் கம்பிகளின் பின்னால் முடங்க வேண்டி நேரும்.

மிருசுவிலில் 8 அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கா, அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார். ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் அவரது மேன்முறையீட்டை நிராகரித்து, 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை உறுதி செய்திருந்தது. அத்தகைய கைதியையே தாம் பதவிக்கு வந்ததும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னித்து விடுவித்து இருந்தார். அவரது அந்த மன்னிப்பு இன்று நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பல தரப்பினரும் இன்றைய நீதிமன்ற நடவடிக்கையைப் பார்த்திருக்கின்றனர்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகின்றார்.

- மின்னல் -

## மண்ணெண்ணெயின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த காலங்களில் நாட்டு மக்களுக்கு, மின்சாரம், நீர் மற்றும் எரிபொருள் என்பவற்றை குறைந்த விலைகளிலேயே அரசாங்கம் வழங்கி வந்தது. இதற்காக ஏற்படும் செலவுகளை திறைசேரியினால் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், தற்போதைய நிலைமையில் அதனைச் செய்ய முடியாது. மண்ணெண்ணெய் தற்போது 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதற்காக 420 ரூபா செலவு ஏற்படுகிறது. எனவே, எதிர்வரும் நாள்களில் கட்டாயமாக மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பட வேண்டும். – என்றார்.

## நெற் செய்கைக் கடனை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதன்படி, இரண்டு ஹெக்டேருக்கு அல்லது அதை விட குறைவான அளவில் நெற் பயிர் செய்கைக்காக அரச வங்கிகளில் ஊடாக பெறப்பட்டு தற்போதைய நிலையில் செலுத்த முடியாத முதன்மை கடன் தொகையை தள்ளுபடி செய்ய இவ்வாறு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## மொட்டையான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதியின் மரணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏராளமான கைதிகள் புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பி ஓடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்கவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்றிவந்த விமானம், 45 மெட்ரிக் தொன் நிறையுடைய ஆடைகளை ஏற்றிக் கொண்டு நாட்டிலிருந்து மீண்டும் புறப்பட விருந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவும் கடும் காற்று காரணமாக விமானத்திற்கு கொண்டுவரப்பட்ட கொள்கலன் ஒன்று விமானத்தின் இயந்திரத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இதன் காரணமாக குறித்த விமானம் நாட்டிலிருந்து வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## எட்டி உதைத்த கேணல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் பணிப்புரைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து பேர் கொண்ட விசாரணை நீதிமன்றத்தின் பரிந்துரைகள் வரும் வரை குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரி அனைத்துப் பணிகளில் இருந்தும் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இராணுவ அதிகாரி ஒருவர், பொது மகன் ஒருவரை எட்டி உதைத்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாக பரவியதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## எரிபொருள்களுடன் ஏழு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடையில் வரும். மற்றுமொரு டீசல் கப்பல் 19 ஆம் திகதி வருகிறது.

13 ஆம் 15 ஆம் திகதிகளுக்கு இடையில் பெற்றோல் கப்பல் ஒன்று வருகிறது. 15 ஆம் திகதி மசகு எண்ணெய்க் கப்பல் வருகிறது.

அதே தினத்தில் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் டீசல் கப்பல் ஒன்றும் வருகிறது. 22 ஆம் திகதியும் எரிபொருள் கப்பல் வருகிறது.

எரிபொருள் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் வேலைத்திட்டங்களைச் செய்து விடுவார்கள் என்று தற்போது எதிர்க்கட்சியினர் குழம்பிப் போயுள்ளனர். இதனைச் செய்தால் அவர்களில் கதை முடிந்து விடும் என்பதே இக்குழப்பத்திற்குக் காரணம். நாங்கள் எப்படியாவது இதனைச் செய்து முடிப்போம் – எனத் தெரிவித்தார்.

## எரிவாயுக் கப்பல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறுதினத்துக்கும் இடையில் இந்தக் கப்பல் இலங்கை வந்தடைய இருந்தது.

எனினும் வானிலை மாற்றம் காரணமாக கப்பலின் வருகை மேலும் தாமதமடையக்கூடும் என லிட்ரோ அறிவித்துள்ளது.

அதன்படி, அந்தக் கப்பல் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை நாட்டை வந்தடையவுள்ளது.

ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக லிட்ரோ எரிவாயு நிறுவனம் மற்றும் உலக வங்கிக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய இந்தக் கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது.

மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைவாக மேலும் ஒரு எரிவாயு கப்பல் எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரர் தெரிவித்துள்ளார்.

## வாழ்க்கைச் செலவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

வாழ்க்கைச் செலவை நிலையாக பேணுவதற்குத் தேவையான கொள்கை மற்றும் நடைமுறை தீர்வுகள் இந்த குழுவின் மூலம் எடுக்கப்பட உள்ளன.

## சாவின் விளிம்பில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையின் பணவீக்கம் தற்போது 122 வீதமாக உயர்ந்துள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ள அவர், சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கைக்கான கடன் முறையை நிராகரித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

இதுவரை காலமாக சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை 16 வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

ஆனால் இலங்கை அதிகாரிகள் எவரும் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேயில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் அவதானிப்பின் படி வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளின் பணவீக்க பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தை அடைந்துள்ளது.

சிம்பாபேவேவின் மிக மோசமான பணவீக்க நிலைமைகளுக்கு அடுத்த படியாக இலங்கை 122 வீத பணவீக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் காலங்களில் மிக மோசமான நிலைமைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும் எனவும் எச்சரித்துள்ளார்.

## ரயில் சேவை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு – கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களின் அதிபர்கள் கடமைகளில் இருந்து விலகியுள்ளனர்.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பான பிரச் சினை காரணமாக, அவர்கள் கடமைகளிலிருந்து விலகியுள்ளனர் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரட்ன தெரிவித்துள்ளார்.

உரிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படாவிட்டால் இன்றை தினத்தில் இருமடங்காக ரயில் சேவைகள் முடங்கக் கூடும். இதனால் அரச இயந்திரம் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரட்ன முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




**மணமகன் விபரம்**

பிறந்த திகதி-21.06.1986
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-கேட்டை
கி.பா-36
செவ்-11ல்
தகைமை-TEX DRASS MEM
தொழில்-அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி-18.03.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ரேவதி
கி.பா-10
செவ்-4ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு - DOCTOR மணமகள்

பிறந்த திகதி-19.12.1980
மதம்-இந்து
ஜாதி-V சைவம் ஆண்
நட்சத்திரம்-பரணி5
கி.பா-6
செவ்-சூரி 3ல்
தகைமை-B.SC COMPUTER
தொழில்-COMPANY COLOMBO
எதிர்பார்ப்பு- –பட்டதாரி அரசசேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி-20.07.1985
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ஆயிலியம்
கி.பா-4
செவ்-சூரி 12
தகைமை-B.A
தொழில்-அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகள்

பிறந்த திகதி-16.04.1985
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-சதயம் 4
கி.பா-9
செவ்-12ல்
தகைமை-B.S.C M.SC
தொழில்- U.S.A. PR
எதிர்பார்ப்பு- பட்டதாரி U.S.A மணமகள் இலங்கை

பிறந்த திகதி-13.11.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தராடம் 4
கி.பா-14
செவ்-சூரி2
தகைமை-I.T SOFTWARE ENG
தொழில்-U,S,A COMPANY
எதிர்பார்ப்பு- ENG DOCTOR மணமகள்தேவை

பிறந்த திகதி-20.08.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ஆயிலியம் 4
கி.பா-25
செவ்-8ல்
தகைமை-ACCOUNTANT
தொழில்-UK ACCOUNTANT
எதிர்பார்ப்பு- UK-CEYLON மணமகள் தேவை

பிறந்த திகதி-28.01.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா-31
செவ்-1ல்
தகைமை- M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- ENG DOCTOR மணமகள்

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி-21.01.1983
மதம்-இந்து
ஜாதி-சைவம் V பெண்
நட்சத்திரம்-ரேவதி 4
கி.பா-28
செவ்-11ல்
தகைமை-B.A
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு- தனியார் அரசசேவை மணமகன் (உத்தரம், அத்தம், சித்திரை(1,2) சுவாதி

பிறந்த திகதி-30.10.1997
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-சித்திரை 1
கி.பா-34
செவ்-4ல்
தகைமை-G.C.E A/L
தொழில்- -
எதிர்பார்ப்பு- UK. GERMANY, CANADA வெளிநாடு PR மணமகன்

பிறந்த திகதி-25.05.1992
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அனுசம் 1
கி.பா-25
செவ்-2ல்
தகைமை-B.S.C
தொழில்-பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு- ENG-DOCTOR அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி-05.09.1997
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அத்தம்
கி.பா-33
செவ்-4ல்
தகைமை-HND QS
தொழில்- QUANTRY SARVEYOR
எதிர்பார்ப்பு- உள்நாடு-வெளிநாடு பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி-05.02.1995
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-ரேவதி
கி.பா-68
செவ்-7ல்
தகைமை-FINANCIAL ENG
தொழில்-ACCOUNTANT
எதிர்பார்ப்பு- வெளிநாடு PR மணமகன்

பிறந்த திகதி-08.12.1990
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-மகம்
கி.பா-24
செவ்-8ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR ENG மணமகன்

பிறந்த திகதி-24.08.2022
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பரணி
கி.பா-55
செவ்-சூரி 1ல்
தகைமை-G.C.G A/L
தொழில்- .-
எதிர்பார்ப்பு-வெளிநாடு PR மணமகன்

பிறந்த திகதி-02.10.1994
மதம்-இந்து
ஜாதி-விஸ்வகுலம்
நட்சத்திரம்-மகம்
கி.பா-40
செவ்-10ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR மணமகன் மட்டும்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வெடிகுண்டு எச்சரிக்கைகள்

'செத்தும் கொடுத்தான் சீதாக்காதி' என்பர். அந்த மாதிரித்தான் முடிந்துவிட்ட விடுதலைப் புலிகள் இயக்கமே, இங்கு பலருக்கும் அரசியல் செயயும் வாய்ப்பை – தளத்தை – அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழர் தரப்புகள் – குறிப்பாக தமிழ்த் தேசிய பரப்பில் அரசியல் செய்யும் தரப்புகள் – விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்துவதில் ஒரு நியாயம் இருக்க கூடும். ஆனால் தென்னிலங்கைத் தரப்புகள் கூட தங்களின் அரசியலுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரனையும் முன்னிலைப்படுத்திப் பயன்படுத்துவதுதான் வேடிக்கை.

'செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் தலை மேலே' என்ற மாதிரி, தென்னிலங்கை அரசியல் சந்தர்ப்பவாதம் எல்லாம் எப்போதும் விவகாரத்தைத் தலையில் சுமத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைதான் பயன்படுத்துகின்றன.

தென்னிலங்கை மக்களிடையே பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைக் கிளப்புவதற்கு, தமிழ் மக்களின் வலிமையான ஏக சக்தியாகத் திகழ்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சாதகமாக பயன்படுத்தி வந்த தரப்புகள், யுத்தம் முடிந்து 13 வருடங்கள் கழிந்த பின்னரும் அந்தப் போக்கை கைவிடுவதாக இல்லை.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைத் தூண்டிவிட்டு, அதில் அரசியல் சுய லாபம் காய்ந்து கொண்டிருந்த தரப்புகளின் இனவாதத் தீ இப்போது செயலிழந்து போய் அணைந்து விட்டது. உண்மையைப் புரிந்து கொண்ட தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் யதார்த்தத்தின் அடிப்படையில் இனவாதப் பிசாசை ஓரங்கட்டும் தீர்மானத் திற்குத் தாங்களே வந்துவிட்டனர்.

'குத்தாட்டம் போட்ட குமரி, கிழவியானாலும் காலை காலை ஆட்டுவாளாம்' என்ற மாதிரி பேரினவாதத்தை நம்பி அரசியல் நடத்திய தென்னிலங்கைத் தரப்புகள் இன்னமும் அந்தப் பேரினவாதத் தீயை மூட்டி அதில் அரசியல் செய்யவே விரும்புகின்றன.

அதன் வெளிப்பாடுகள்தான் புலிகளின் போராட்டங்களை ஒட்டிய தினங்களில் இதோ குண்டு வெடிக்கப் போகின்றது, அதோ வெடிக்கப் போகின்றது என வெளிப்படுத்தப்படும் செய்திகள். அந்த வகையறாவைச் சேர்ந்ததுதான் இப்போது வெளியாகி உள்ள தகவலும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் குண்டு வெடிக்க போகின்றது என்றார்கள். இப்போது கரும்புலி வீரர்கள் தினத்தில், அந்நிய சக்திகளின் தலையீட்டில் குண்டுகள் வெடிக்கலாம் என்று எச்சரிக்கை பாதுகாப்புச் செயலாளருக்கு பொலிஸ்மா அதிபர் தரப்பில் இருந்து தெரியப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இது, தமிழர்களுக்கு எதிரான வரலாற்றுக் கொடூரம் அரங்கேறிய கறுப்பு ஜூலைத் திங்கள். இந்த மாதம் முழுவதும் கூட இத்தகைய வெடிகுண்டுக் கயிறை விட்டுக் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இப்படிக் காலகதி தவறாமல் வெடிகுண்டு எச்சரிக்கை விடுக்கும் கைங்கரியத்தை வெறும் அரசியல் லாப நோக்கம் கருதிய சூழலை ஏற்படுத்தும் விடயமாக மட்டும் கருதி ஒதுக்கி விட முடியாது. தமிழருக்கு எதிரான இனவெறுப்புக் கருத்து நிலையை ஏற்படுத்துவதன் மூலம் அரசியல் சாதக நிலைமையை உருவாக்கும் எத்தனைமாகவும் கருதி இதை ஒதுக்கி விட முடியாது. இப்படி எச்சரிக்கைகள் வெளியிடும் தந்திரோபாயத்துக்குப் பின்னால் பிறிது சூத்திரங்கள் ஏதும் புதைந்து இருக்கலாம் என்றே சந்தேகிக்கப்படுகிறது.

ஒரு தரப்பை அரசியல் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்காகவே ஈஸ்டர் தொடர் குண்டு தாக்குதல்கள் தூண்டப்பட்டன என்று சந்தேகிக்கப்படும் இன்றைய சூழ்நிலையில், ஒரு தரப்பை ஆட்சியில் தக்க வைப்பதற்கும் கூட அது இடம்பெற மாட்டாது என்று கூறுவதற்கு இல்லை. இதுதான் நிலைமை.

# மே 9 வன்முறை சம்பவம் அரசின் சதித் திட்டமா?

## அநுர கேள்வி



நாட்டில் மீண்டும் வன்முறையை ஏற்படுத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல அரசியல் குழுக்கள் செயற்படுகின்றன என அரசாங்கம் முன்வைக்கும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

அத்தோடு, மே 9ஆம் திகதி நடந்த சம்பவம் அரசின் சதியா என சந்தேகம் எழுந்துள்ளதாக கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் –

நாடு எங்கும் மக்கள் தங்களின் நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரி குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கம் இப்போது என்ன செய்ய வேண்டும்? இந்த பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அல்லது அரசாங்கம் வெளியேற வேண்டும்.

ஆனால் அரசாங்கம் தற்போது நாட்டில் இன்னொரு விதமான குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

அரசியல்வாதிகளை தாக்க மற்ற எதிர்க் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து நாங்கள் செயற்படுகிறோம் என்று தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்து சமூகத்தை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

அடுத்த சில நாள்களில் போராட்டங்கள் மிகத் தீவிரமான நிலைக்கு செல்லும் என்பது மிகத் தெளிவாகக் காணமுடிகிறது.

இதை சமாளிக்க அரசு வெளியிட்ட வேடிக்கையான அறிக்கையாகவே இதை பார்க்கிறோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மருந்துகள் கிடைத்திருந்தும் வைத்தியசாலைகளுக்கு எரிபொருள் தட்டுப்பாட்டால் வழங்கமுடியாத நிலைமை!

## அரசாங்க மருந்தாளர்கள் சமூகம் வேதனை

மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்ட மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என அரசாங்க மருந்தாளர்கள் சமூகம் தெரிவித்துள்ளது.

பல தரப்பும் வழங்கிய மருந்துப்பொருள்கள் காரணமாக மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஓரளவு குறைந்துள்ளது.

எனினும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என அரசாங்க மருந்தாளர்கள் சமூகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோக பிரிவில் போதியளவு மருந்துகளும் மருத்துவப் பொருள்களும் இருக்கவில்லை. எனினும் பலதரப்பினதும் நன்கொடை காரணமாக இந்த பற்றாக்குறைக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அரசாங்க மருந்தாளர்கள் சமூகத்தின் தலைவர் அஜித் திலகரட்ண, எனினும் தற்போது மருந்துகளை மருத்துவப்பொருள்களை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவ விநியோக பிரிவில் மருந்துகளும் மருத்துவ விநியோகமும் காணப்படுகின்ற போதிலும் வைத்தியசாலைகளில் அவை இல்லாத நிலை காணப்படுகின்றது உதாரணத்துக்கு சிறுநீரக நோயாளிகளுக்கான மருந்து, மருத்துவ விநியோக பிரிவில் காணப்படுகின்றது.

ஆனால் சிறுநீரக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும் அநுராதபுரம் வைத்தியசாலையில் அந்த மருந்து இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் கொழும்பில் உள்ள மருத்துவ விநியோக பிரிவிற்கு வாகனங்களை அனுப்பும் நிலையில் வைத்தியசாலைகள் இல்லை, எரிபொருள் இன்மை மருத்துவ விநியோக பிரிவின் வாகனங்களையும் பாதித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஒரு வைத்தியசாலை மாத்திரம் பாதிக்கப்படவில்லை. பல வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தொலைதூரத்தில் உள்ள வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அரசாங்க மருந்தாளர்கள் சமூகத்தின் தலைவர் அஜித் திலகரட்ண தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக வியன்னா உடன்படிக்கையை மீறும் நிலைமை?

நாட்டில் நிலவும் கடும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பில் உள்ள பல வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலய அலுவலகங்கள் தற்காலிகமாக மூடப்படும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகம் ஒன்று, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அதிகாரிகளுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத காரணத்தால் அலுவலகத்தை ஒரு வார காலத்துக்கு மூட வேண்டியுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ளது.

வியன்னா உடன்படிக்கையின்படி, வெளிநாட்டு தூதரகங்கள் சரியாகச் செயல்படுவதை அந்த நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

இந்தநிலையில் தற்போது தூதரகங்கள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால் இலங்கை சர்வதேச சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டப்படும் வாய்ப்பு உள்ளது எனவும் கூறப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பல்வேறு தரப்பினரதும் கோரிக்கையாக உள்ளது.

# மூத்த இராஜதந்திரிகளின் ஓய்வினால் இந்தியத் தூதர்கள் பலரும் மாற்றம்



இதுவரை பூட்டானுக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றிய ருசிரா கம்போஜ் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக பதவியேற்றுள்ளார்.

இந்திய நாட்டின் பல மூத்த தூதர்கள், ராஜதந்திரிகள் ஓய்வு பெற்ற நிலையில், அடுத்து முக்கிய தலைநகரங்களில் உள்ள இந்தியத் தூதரகங்களில் பல புதிய முகங்களை நியமிக்க இந்திய இராஜதந்திரம் தயாராகி வருகிறது.

இதுவரை பூட்டானுக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றிய ருசிரா கம்போஜ் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியாக பதவியேற்றுள்ள நிலையில், இதுவரை வங்க தேசத்துக்கான இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த விக்ரம் துரைசாமி ஐக்கிய இராச்சியத்திற்கான உயர் ஆணையாளராகியுள்ளார்.

இந்த இரண்டு முடிவுகளும் - நியமனங்களும் - இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ராவின் முத்திரையுடன் கூடிய முதல் சில முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். ஏனெனில் அவை இனி, அயல் தேசங்களுக்கும் இந்த உயர் மட்ட நியமனங்கள் இடம்பெறப் போகின்றமையை கோடிகாட்டுகின்றன. நியூயோர்க்கில் பணியாற்றிய ஐ.நாவுக்கான தூதுவர் டி. எஸ். திருமூர்த்தி, லண்டனில் தூதுவராகப் பணியாற்றிய காயத்ரி இஸ்ஸார் குமார் இருவரும் ஜூன் மாத இறுதியில் ஓய்வு பெற்றனர்.

இந்தியாவின் கனடாவுக்கான உயர் ஸ்தானிகராகப் பணியாற்றிய அஜய் பிசாரியா ஓய்வு பெற்றுள்ளதால், இதுவரை ஜப்பானுக்கான இந்தியத் தூதர் சஞ்சய் குமார் வர்மா கனடாவுக்கான அடுத்த உயர் ஸ்தானிகராகப் பொறுப்பேற்கின்றார்.

இதனால் டோக்கியோவில் ஏற்படும் வெற்றிடத்துக்கு இரண்டு மூத்த அதிகாரிகளின் பெயர்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அவர்களில் ஒருவர் 'குவாட்' அமைப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளை கையாளுபவர். மற்றவர் மேற்கு ஆசியாவில் ஒரு தூதுவர்.

இந்தியா - கனடா உறவுகள் கொந்தளிப்பான நேரத்தில், இந்தியாவின் கனடாவிற்கான தூதராக இருந்து விடயங்களைக் கையாண்டு நிர்வகித்தவர் பிசாரியா. குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடி விவசாயிகள் போராட்டங்களைக் கையாண்டமை குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் விமர்சனக் கருத்துக்கள் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர முடக்கத்தை ஏற்படுத்திய பின்னர், கடந்த மாதம் ஜேர்மனியில் நடைபெற்ற ஜி - 7 உச்சிமாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ள அழைக்கப்பட்ட இந்தியப் பிரதமர் மோடி அங்கு கனடாப் பிரதமர் ட்ரூடோ சந்தித்து சமரசம் ஏற்பட்டதை அடுத்து, இப்போது பிசாரியா ஒட்டாவாவில் தமது பணியை முடித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறுகிறார்.

*2020 முதல் டாக்காவில் பணியாற்றும் - வயதைப் பொறுத்தவரை ஐம்பதுகளின் முற்பகுதியில் இருக்கும் -1992 ஆம் ஆண்டு அணியைச் சேர்ந்த அதிகாரியான விக்ரம் துரைசாமி, அவரது புதிய நியமனம் உறுதி செய்யப்பட்டால் ஐக்கிய இராச்சியத்திற்கான இளைய உயர் ஸ்தானிகர்களில் ஒருவராக இருப்பார்.*

அவருக்கு இணையான இந்தியாவுக்கான இங்கிலாந்து உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லிஸுடன் அவர் வயது விடயத்தில் இணைகிறார்.

இந்த இருவருமே அவர்களது புதிய பதவிகளில் அவர்களுக்கு முன்பிருந்த அதிகாரிகளை விட - முன்னோடிகளை விட - இளையவர்கள். இந்த ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முடிப்பதில் இருவரும் முக்கிய பங்கு வகித்தனர். திரு. விக்ரம் துரைசாமி முன்பு சியோல் மற்றும் தாஷ்கண்டிற்கான தூதராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

இதற்கிடையில், கென்யாவிற்கான இந்திய உயர் ஸ்தானிகர் வீரேந்திர குமார் பால், துருக்கிக்கான அடுத்த தூதராகவும் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தில் தெற்குப் பிராந்திய நாடுகளுக்கான இணைச் செயலாளர் பதவியில் இருக்கும் விஸ்வாஸ் விது சப்கல் பெருவுக்கான அடுத்த தூதராகவும் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

திம்பு மற்றும் டாக்காவுக்கான அடுத்த தூதர்கள் இன்னும் முடிவடையாத நிலையில், வொஷிங்டனில் உள்ள இந்தியாவின் துணைத் தூதரான சுதாகர் தலேலா, பூடான் மற்றும் நேபாளத்தை இணைச் செயலாளராக (வடக்கு) கையாண்டவர் என்பதால் அயலக விடயங்களில் அனுபவமிக்க ஒருவராக சுதாகர் தலேலா மீண்டும் வருவார் என்று கூறப்படுகிறது. வியட்நாமுக்கான இந்தியத் தூதராக பிரனய் வர்மா மற்றும் ஈரானுக்கான தூதர் கதாம் தர்மேந்திரா, முன்பு கொள்கை திட்டமிடல் மேசையை கையாண்டவர்கள் வருகின்றனர்.

காத்மாண்டுவில், குவாத்ராவின் இடத்துக்குப் புதிய தூதராக, முன்னாள் சீனாவில் பணியாற்றிய நவீன் ஸ்ரீவஸ்தவா, தனது தமது நியமனச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து, கடந்த வாரம் பிரதமர் ஷேர் பகதூர் தியூபா மற்றும் வெளியுறவு அமைச்சர் நாராயண் கட்காவை சந்தித்துள்ளார்.

**(மூலம்: த ஹிண்டு)**

# பாகிஸ்தானில் அரசியல்வாதிகளைத் தொடர்பு கொள்ளக் கூடாது; இராணுவ - உளவு அதிகாரிகளுக்கு பாக். தளபதி அதிரடி உத்தரவு

இடைத்தேர்தலை முன்னிட்டு தனது கட்சித் தலைவர்கள், தொண்டர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது என முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கூறியிருக்கின்றார்.

அதேநேரம், தேவையற்ற சர்ச்சைகளால் இராணுவம் மற்றும் உளவுத் துறை மீது விமர்சனங்கள் வருவதை தவிர்க்க பாகிஸ்தான் இராணுவத் தரப்பு நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் பிரதமர் பாஸ் ஷெரீப் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு இராணுவ தளபதியாக உமர் ஜாவத் பஜ்வா உள்ளார். முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு கவிழ்ந்ததையடுத்து புதிய பிரதமராக பாஸ் ஷெரீப் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தனது அரசுக் கவிழ்ப்பில் வெளிநாட்டு சதி இருப்பதாகவும், இராணுவம் உடந்தையாக இருந்தது என்றும் இம்ரான்கான் குற்றம்சாட்டினார்.

இதற்கிடையே பஞ்சாப் மாகாணத்தில் நடைபெற இருக்கும் இடைத்தேர்தலில் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெக்ரிக் – இ – இன்சாப் கட்சிக்கு எதிராக செயல்பட பாகிஸ்தான் இராணுவம் முயற்சித்ததாக புகார் எழுந்தது.

இதுதொடர்பாக இம்ரான்கான் கூறும்போது, எனது வேட்பாளர்களுக்கு தெரியாத எண்களில் இருந்து தொலைபேசி அழைப்புகள் வருகின்றன என அவர்கள் என்னிடம் தெரிவித்தனர். இடைத்தேர்தலை முன்னிட்டு எனது கட்சி தலைவர்கள், தொண்டர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது" – என்றார்.

இந்த நிலையில் இராணுவம் மற்றும் உளவுத்துறையான ஐ.எஸ். அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜாவத் பஜ்வா அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

அதில், இராணுவ அதிகாரிகள், உளவுத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அரசியலில் இருந்து விலகி இருக்க வேண்டும். அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொள்வதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்து உள்ளார்.



தேவையற்ற சர்ச்சைகளால் இராணுவம் மற்றும் உளவுத்துறை மீது விமர்சனங்கள் வருவதை தவிர்க்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

# நாட்டில் ஒரு மூடை யூரியா உரம் 40 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை!

## தட்டுப்பாடே காரணம் அமைச்சர் மஹிந்த அமரவீர



இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் ஓமானில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள 65 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தில் முதற்கட்டமாக 40 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் எதிர்வரும் 08 ஆம் திகதி நாட்டை வந்தடையும்.

ஒரு மூடை யூரியா 10 ஆயிரம் ரூபாவிற்கு விவசாய திணைக்களம் ஊடாக பகிர்ந்தளிக்கப்படும். எதிர்வரும் 03 மாத காலத்திற்குள் தேசிய விவசாய கொள்கை திட்டம் முழுமையாக சமர்ப்பிக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் திங்கட்கிழமை நாடாளுமன்றம் கூடிய போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கயந்த கருணாதிலக்க முன்வைத்த வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேசிய விவசாய கொள்கை திட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை நிதியமைச்சு உட்பட முக்கிய அமைச்சுக்களால் பரிசீலனை செய்யப்படுகின்றன.

எதிர்வரும் 03 மாத காலத்துக்குள் தேசிய விவசாய கொள்கைத் திட்டத்தை 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்.

விவசாய கொள்கை நிலையானதாகக் காணப்பட வேண்டும். அரசாங்கமும், அமைச்சர்களும் மாற்றமடையும் போது விவசாயக் கொள்கை மாற்றமடையக் கூடாது. காலத்துக்கேற்றாட் போல் விவசாய கொள்கை மாற்றமடைந்துள்ளமை தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு ஏதுவான காரணியாக காணப்படுகிறது.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் ஓமான் நாட்டிலிருந்து 65 ஆயிரம் மெற்றிக்தொன் உரத்தை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 40 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் எதிர்வரும் 8ஆம் திகதி நாட்டை வந்தடைந்தவுடன் 09 மற்றும் 10ஆம் திகதிகளில் விவசாய திணைக்களம் மற்றும் மாவட்ட செயலக பிரிவுகள் ஊடாக உரம் பகிர்ந்தளிக்கப்படும். உரம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் ஒரு மூடை யூரியா உரம் 40 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் உரம் 10 ஆயிரம் ரூபாவிற்கு விவசாய திணைக்களம் ஊடாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

கடனுதவி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் மிகுதி 25 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் சோள பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். சிறுபோகத்தில் சோள பயிர்ச்செய்கையாளர்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ளார்கள்.

பெரும்போக பயிர்ச்செய்கையில் சிறந்த விளைச்சலைபெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பெரும்போகம் வெற்றிபெற்றால் அரிசி இறக்குமதிக்கான தேவை ஏற்படாது. எதிர்வரும் காலங்களில் உரம் பற்றாக்குறைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். – என்றார்.

# 35 வயதுக்கும் மேற்பட்ட பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு தொழிற்சங்கங்களின் இணக்கம் அவசியம்

## கல்வியமைச்சர் சுசில் கூறுகிறார்



தொழிற்சங்கங்களின் இணக்கப்பாடு கிடைக்குமானால் தற்போது கல்விக் காரியாலயங்களில் பணிபுரியும் 24 ஆயிரம் பட்டதாரிகளையும் ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ள முடியும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் புத்திக்க பத்திரன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதில் வயதெல்லை பிரச்சினைகள் காணப்படுகின்றன. அரச சேவையில் ஆசிரியர்களாக நியமித்துக் கொள்வதற்கு அவர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

மேற்படி பட்டதாரிகளில் ஆசிரியர் சேவைக்கு விருப்பம்தெரிவித்துள்ளவர்களில்அதிகமானவர்கள் 35வயதுக்குமேற்பட்டவர்களாகக்காணப்படுகின்றனர்.

அவ்வாறு அவர்களுக்கு நியமனம் வழங்கினால் தொழிற்சங்கங்கள் சிக்கல்களை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

ஏனெனில் யாப்பின் பிரகாரம் பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு இணைத்துக்கொள்வதாக இருந்தால் 35 வயதைத் தாண்டக்கூடாது. இந்த நிலையில் அது தொடர்பில் தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்த வேண்டியது அவசியம்.

அவ்வாறு பேச்சு நடத்தப்பட்டு அவர்களின் இணக்கப்பாடு கிடைக்குமானால் மேற்படி பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறு நியமிக்கப்படும் போது அவர்களுக்கான கொடுப்பனவும் மேலும் ஆறாயிரத்தி 700 ரூபாவால் அதிகரிக்கும். அவர்கள் தற்போது காரியாலய உத்தியோகத்தர்களாகவே செயற்பட்டு வருகின்றனர். அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தொழிற்சங்கங்களின் முடிவே தேவைப்படுகிறது. பட்டதாரிகளை அரச சேவைக்கு இணைத்துக்கொள்ள 45 வயதுவரை முடியும். என்றார்.

# குண்டுத் தாக்குதல் என்பது ஒரு தகவல் மாத்திரமேயாம்!

## பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ விளக்கம்



வடக்கு, கிழக்கு அல்லது தெற்கில் குண்டுத் தாக்குதலொன்றோ அல்லது நாசகார செயல்களோ, வெளிநாட்டு உளவுச் சேவை ஒன்றின் தலையீட்டுடன் இடம்பெறலாம் என்பது ஒரு தகவல் மட்டுமே என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு செயலருக்கு அனுப்பிய கடிதத்தை மையப்படுத்தி இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் விளக்கம் கோரியது. அதற்கு பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ –

பொலிஸாருக்கு இவ்வாறான தகவல்கள் பல்வேறு நபர்களிடம் இருந்து கிடைக்கும். அவ்வாறுகிடைக்கப் பெற்ற தகவல் ஒன்று தேசிய பாதுகாப்புடன் தொடர்பு பட்டிருந்தமையால், அது தொடர்பில் பாதுகாப்புச் செயலருக்கு அறிவிக்கப்பட்டது.

அது ஒரு தகவல் மட்டுமே. அந்த தகவல் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து உறுதி செய்துகொள்வதற்காக, அனைத்து உளவுத் துறைகளுக்கும் பகிர்ந்து கொள்வதன் நோக்காக கொண்டு பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்ட அந்த தகவல் பாதுகாப்பு செயலரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. – எனத் தெரிவித்தார்.

# மஹிந்த மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை துளியவும் குறையவில்லை

## இப்பவும் நம்புகிறார் சாகர காரியவசம்



பொதுஜன பெரமுன மீதும், மஹிந்த ராஜபக்ஷ மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை துளியவும் குறைவடையவில்லை. எனவே நாம் தேர்தலைக் கண்டு பின்வாங்கப் போபவர்களல்லர்.

எந்த தேர்தலானாலும் அதில் நாமே மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

அண்மையில் கட்சி செயலாளர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதியின் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தமக்குரியதாகும் என்று ஆணைக்குழு அறிவித்தது. இது சட்ட ரீதியான விடயமாகும்.

இது இவ்வாறிருக்க, நாட்டில் பொதுஜன பெரமுனவே இன்றும் செல்வாக்குள்ள கட்சியாகக் காணப்படுகிறது என்று நாம் நம்புகின்றோம்.

பொதுஜன பெரமுனவின் மீதும், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை துளியளவும் குறைவடையவில்லை. எனவே, நாம் தேர்தலைக் கண்டு ஒரு போதும் பின்வாங்கப் போபவர்களல்லர். பொதுஜன பெரமுன அவ்வாறான கட்சி அல்ல.

எமது கட்சிக்கெதிராக நாடாளுமன்றத்துக்குள் சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் அடிப்படையிலேயே ஒரு தொகுதியினர் எதிர்க்கட்சியிலும், பிறிதொரு தரப்பினர் சுயாதீனமாகவும் செயற்படத் தொடங்கினர்.

இவர்களே மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்குமாறு கோரினர். மொட்டுசின்னத்தில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட எவருக்கும் அவ்வாறு கோரும் உரிமை கிடையாது.

எவ்வாறிருப்பினும் மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை இன்னும் குறைவடையவில்லை. கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு மக்கள் பதிலளிப்பர்.

எந்த தேர்தலானாலும் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் பலம் எமக்கிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் அவரின் வழிகாட்டலின் கீழ் நாம் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெறுவோம். அவரையே மக்கள் முழுமையாக நம்புகின்றனர். – என்றார்.



# குடமுழுக்குக் காணும் கேதீச்சரம்



- த.மனோகரன் -
(துணைத் தலைவர்,
அகில இலங்கை இந்துமா மன்றம்)

இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலேயேயுள்ள பழம் பெரும் வழிபாட்டிடங்களில் ஒன்றாக இலங்கையின் மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீச்சர சிவாலயம் பெருமையுடன் திகழ்கின்றது. இலங்கையிலுள்ள பஞ்ச ஈஸ்வரங்களிலொன்றாகவும் பெருமை பெறுகின்றது. இலங்கைத் தீவில் வேறு எந்த சமய நம்பிக்கையும் புகுவதற்கு முன்பே சிவ வழிபாடு சிறந்து விளங்கியது என்பதற்கு திருக்கேதீச்சரம் உள்ளிட்ட ஐந்து சிவாலயங்களும் வரலாற்றுச் சான்றுகளாயுள்ளன.

ஆம். இலங்கைத் தீவில் தேவநம்பியதீசன் காலத்தில் புத்த சமயக் கோட்பாடுகள் புகுத்தப்படுவதற்கு முன்பும், அதேபோல் இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்பும் சிவாலயங்கள் இருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த ஐந்து சிவாலயங்களாக யாழ்ப்பாணத்திலுள்ள நகுலேஸ்வரம், திருகோணமலையிலுள்ள கோணேச்சரம் மன்னாரிலுள்ள கேதீச்சரம், சிலாபத்திலுள்ள முன்னேச்சரம் ஆகியவற்றுடன், தென்னிலங்கையின் மாத்தறை மாவட்டத்திலுள்ள தேவேந்திர முனையிலுள்ள (தெவுந்தர) தொண்டீஸ்வரமும் குறிப்பிடப்படுகின்றன.

அந்நியரானபோத்துக்கேயரின் ஆக்கிரமிப்பின் பெறுபேறாக மேற்படி சிவாலயங்கள் சிதைத்தழிக்கப்பட்டமையும் அவற்றின் முதன் நான்கு சிவாலயங்களும் பின்னாளில் சிவாலயங்களாக மீளமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் ஐந்தாவதாக குறிப்பிடப்பட்ட சிவாலயம் இன்று விஷ்ணு ஆலயமாக மீளமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விஜயனும் அவனது தோழர்களும் இந்தியாவின் லாலா நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கையில் கரை ஒதுங்கிய இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் குறித்த ஐந்து சிவாலயங்களும் தீவின் நாலா பக்கங்களிலும் சிறப்புடன் இருந்தன எனவும், விஜயனுடன் வந்த உபதிஸ்ஸ என்ற பிராமணன் குறித்த ஐந்து சிவாலயங்களுக்கும் சென்று வழிபட்டான் எனவும் மாகாவம்சம் போன்ற காவிய நூல்களில் கூறப்பட்டுள்ளவையும், அவ்வாறே இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளரான சேர் போல் ஈ பீரீஸ் என்ற சிங்கள அறிஞர் 1917 ஆம் ஆண்டு ஆய்வரங்கொன்றில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையில் அதனை உறுதிப்படுத்தியுள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு பழமையும், பெருமையும் கொண்ட சிவாலயங்களில் ஒன்றான திருக்கேதீச்சர சிவாலயம் இந்திய மத்திய அரசின் பெருமளவு நிதியுடனும், ஒத்துழைப்புடனும் கற்கோயிலாக புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இது உலக வாழ் இந்துக்களின் பெருமைக்குரிய தொன்றாகவும் அமைகின்றது..

2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்று இருப்பைக் கொண்டதாக அறியப்படும் இச்சிவாலயம், அதற்கு முந்திய இதிகாச கால இருப்பையும் கொண்டதாக குறிப்பிடப்படுகின்றது. இராமபிரான் கேதீச்வரத்திலுள்ள சிவபிரானை வழிபட்டார் எனவும், கேது வழிபட்ட தலமாகவும் இத்தலம் கூறப்படுவதன் மூலமும் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான இருப்பு இச்சிவத்தலத்திற்கு உண்டென்று உணர்த்தப்படுகின்றது.

கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவார முதலிகளிலொருவரான திருஞானசம்பந்த மூர்த்தி நயனார் விருது குன்றமா மேருவில் நாணற என்ற தேவார திருப்பதிகத்தையும், அவ்வாறே 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் நத்தார் படைஞானன் பசுவேறி என்ற தேவார திருப்பதிகத்தையும் திருக்கேதீச்சரத்தில் கோயில் கொண்டுள்ள கேதீச்சர பெருமான் மீது பாடியுள்ளமையும் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இத்தலத்தின் பெருமையையும் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன.

போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பின் பெறுபேறாக சிதைத்தழிக்கப்பட்ட பண்டைய கேதீச்சரக் கோயிலின் கற்களைக்கொண்டு மன்னாரில் போர்த்துக்கேயர் கோட்டை அமைத்தமையும் பதிவிலுள்ளது.

இவ்வாறு இருந்த நிலையில் இந்துப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வழிகாட்டலில் இந்த சிவாலயம் மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, படிப்படியாக வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. பசுபதிச் செட்டியார், கந்தையா வைத்தியநாதன், இ.நமசிவாயம் போன்றவர்களின் பெருமளவு பங்களிப்பும் இடம்பெற்றுள்ளது.

இன்று இந்திய அரசின் அனுசரணையுடன் கருங்கற் கோவிலாக மீளவும் பெரும் எழுச்சி பெற்று குடமுழுக்கு காணும் நன்னாள் உருவாகியுள்ளமை இலங்கை வாழ் இந்துத் தமிழ் மக்களின் மீள் எழுச்சியின் தொடக்கமாகவும், உலக இந்துக்களின் பெருமையை பறைசாற்றும் ஒன்றாகவும் கொள்ளலாம்.

பாலாவித் தீர்த்தத்தைக் கொண்ட பாடல் பெற்ற கௌரி அம்மையுடன் உறையும் கேதீச்வர பெருமானின் கருணை ஒளி உலகமெங்கும் பரவ வழிசெய்வோம். தென்னாடுடைய சிவனே போற்றி என்று கேதீச்சர பெருமனைப் போற்றி வழிபடுவதுடன், என்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி, இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க என்று அனைத்துலக நலனுக்குமாக பிரார்த்தனை செய்வோம்.





# வரலாற்று நெறியில் பரமேஸ்வரனின் குடமுழுக்கு



- கௌ.சித்தாந்தன் -

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆன்மிக ரீதியான இதயமாகவும், நீள நினைதலுக்குரிய முழுமுதற் பொருளாகவும்,பார் போற்றும் விற்பன்னர் சேர். பொன். இராமநாதனின் மனதில் நீங்கா நிறைந்திருந்த ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானிற்கான குட முழுக்குப் பெருவிழாவானது சுபகிருது வருடம் ஆனி மாதம் 22ஆம் நாள், இன்று (06.07.2022) புதன் கிழமை, காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்வானது சைவப்பெருமக்கள் எல்லோரும் பக்திமழையில் உருகித் திளைப்பதற்கான சந்தர்ப்பமாகும்.

இப்பிரபஞ்சம் முழுவதும் வீற்றிருக்கின்ற இறைவனைத் தியானம், மந்திரம், பாவனை, கிரியைகளின் வாயிலாக அக்கினி கும்பத்தில் உருவேற்றம் செய்து வழிபாடு இயற்றி கோயிலில் நிலைநிறுத்தப் பெற்ற விக்கிரகங்களில் சேர்ப்பித்து ஆன்மாக்களுக்கு திருவருள் செய்வித்தலே திருக்குடமுழுக்காகும்.

### குடமுழுக்கு வகைகள்

இந்த குடமுழுக்கானது அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என்ற நான்கு வகைகளையுடையது என்று சிவாகமங்கள்கூறுகின்றன.

ஓர் ஆலயத்தைப் புதிதாகக்கட்டி அங்கே ஒரு விக்கிரகத்தை நிலைநிறுத்துவது அநாவர்த்தனம், முன்னர் இருந்த பழைமையான ஆலயம் அழிந்தால் மீண்டும் ஓர் ஆலயத்தை அமைத்தல் ஆவர்த்தனம், ஓர் ஆலயத்தில் திருத்தம் செய்வதற்காக பாலஸ்தாபனம் (இளங் கோயில்) செய்து புதுமையாக்கிய பின்னர் மீண்டும் உரிய இடத்தில் மூர்த்தியை நிலைநிறுத்துதல் புனராவர்த்தனம், ஆலயத்தில் கள்வர்கள்,விலங்குகள் மற்றும் ஆசார சீலமற்றோர் நுழைதல்,மரணம் ஏற்படுதல் போன்ற காரணங்களால் ஆலயத்தை தூய்மையாக்கி உடனடியாக மூர்த்தியை நிலைநிறுத்துதல் அந்தரிதம்.




இதில் பரமேஸ்வரன் ஆலய குடமுழுக்கானது புனராவர்த்தன பெருங்கிரியையைச் சார்ந்ததாகின்றது.

### இராமநாதனின் கோட்பாடு

எமது சைவ சமயத்தில் இறை அவதாரம் என்ற பேச்சுக்கு இடமில்லை. ஆனால் ஆன்மாக்களை இலகுவில் ஆள்கொள்வதற்காக இறைவன் விக்கிரகங்களில் இறங்கி அருள் புரிவதான நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்வதே குடமுழுக்கு கிரியை என்பது இங்கே நினைவு கூரப்பட வேண்டிய தொன்றாகும்.

'உலகம் யாவும் பரமேஸ்வரப் பெருமானின் சொத்து, நாமெல்லாம் பரமேஸ்வரப் பெருமானின் குழந்தைகள், உடைமைகள்' என்பதே சேர்.பொன். இராமநாதனின் கோட்பாடு என்று பல்கலைப் புலவர் க.சி.குலரத்தினம் குறிப்பிடுகிறார். இதனை மனங்கொண்டே சேர். பொன் இராமநாதன் அவர்களால் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தின் குடமுழுக்கு நிகழ்வில் அப்பெருமானின் நாமத்தை நினைவுகூர்வது நன்றிக்கடனின் பாற்பட்டதாகும்.

### அருகில் சித்தர் சமாதி

வேதவனத்தார் என்கின்ற பெரியவர் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் அவர்களின் பரம்பரையில் வந்தவர். அவரை அடியொற்றி வந்த சுப்பிரமணியர் என்பவரே பரமேஸ்வரக் கல்லூரி அமையும் நிலப் பரப்பை வாங்கத் துணைநின்றவர். இந்த பரமேஸ்வரக் கல்லூரி அமைந்த சூழலின் அழகு தரிசனத்தைப் பார்க்கின்றபோது அத்திக்குளமும் திருவாத்தி மரங்கள் நிறைந்த இயற்கைச் சூழலில் அமைந்திருந்தமை அதன் பிற்கால வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று தெரிகின்றது. அத்தோடு இந்த ஆலயத்திற்கு அருகில் சித்தர் சமாதி ஒன்று அமைந்திருந்தமையும், இவ்வாலயத்தின் கருணைப்பெருக்கிற்கு முக்கிய காரணம் என்பது பலர் அறியாதது. இச்சித்தர் சமாதி அமைந்தமை பற்றிய செய்தியை யோகர் சுவாமிகள் தான் நல்லூர் கார்த்திகேயக்குருக்களிற்குத் தெரிவித்தார் என்று அறியக்கிடக்கின்றது.

### செம்பாட்டுப் பூமி

இந்த இடத்தை செம்பாட்டு பூமி எனவும் அழைத்திருக்கின்றனர். செம்பவள மண்ணின் வாசனையைப் பலரும் விதந்து கூறியுள்ளனர்.

சைவ உணவை உண்டு சாத்துவீக குணத்துடன் வாழ்ந்து இறைவனை அடைதலே வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும். இது மனிதப்பண்பாட்டு விருத்திக்கு துணைநிற்கும். இத்தகைய சைவ உணவை உட்கொண்டு, சீருடன் வாழ்ந்த இடமாகத் திருநெல்வேலி அன்றையகாலத்தில் காணப்பட்டமையால் இந்த புனித சூழலிலேயே பரமேஸ்வரன் பார்வதி அம்மாளுடன் உறைவதற்கு அடிகோலியது என்று கூறலாம்.

### பரமேஸ்வரன் கல்லூரி

பரமேஸ்வரன் கல்லூரி 22.08.1921 இல் சேர். பொன்.இராமநாதனின் பெருமுயற்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நமது இந்து சைவ பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஆலயம் என்ற சொல் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. ஆலயம் என்பது மனஒருமைப் பாட்டுக்குரிய இடமாகும். கல்வி கற்பதற்கு மன ஒருமைப்பாடு அவசியம். 'கல்வியின் நோக்கமே மனதை ஒரு முகப்படுத்துதல்' தான் என்று நவீன கல்விச் சிந்தனையாளரான சுவாமி விவேகானந்தரும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆலயம் என்பதனை கருப்பொருளாகக் கொண்ட வகையில் 'வித்தியாலயம்' என்பது அமைகிறது.

இன்றைய பரமேஸ்வரன் ஆலயத்தினுடைய தொடக்கமானது பிரார்த்தனை மண்டபத்திலிருந்து உருவாக்கம் பெற்றது என்ற உண்மையும் பலர்அறியாதது. எமது சிவாலயங்களின் வாயில்கள் கிழக்கு நோக்கி அமைந்திருப்பதே ஆகமவிதி. ஆனால், இராமநாதனால் அவரது கல்லூரிகளில் நிறுவப்பட்ட சிவாலயங்கள் தெற்கு நோக்கி காணப்படுகின்றன. இது ஒரு விதிவிலக்கானது. குறிப்பிட்ட பிரார்த்தனை மண்டபத்தில் கேடயம் ஒன்று அமைக்கப் பெற்று ஐம்பொன்னாலான சோமாஸ்கந்த மூர்த்தத்தை எழுந்தருளச் செய்து காலை, மாலை சரவணன் எனும் சிவப் பிராமணரால் பூசை மேற்கொள்ளப் பட்டது. யோகர் சுவாமிகள் சரவணப்பிராமணரோடு உரையாடிய இடமாக இப்பிரார்த்தனை மண்டபம் காணப்படுகின்றது. இங்கே கல்வி பயில்கின்ற மாணவர்கள் பணிவுடன், சுய ஒழுக்கத்துடன் வந்து தூய்மையான உடையுடன் 'சிவசிவ'என்று திருநீறு பூசி, சந்தனப் பொட்டிட்டு பரமேஸ்வரப் பெருமானை வணங்கிய பின் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டனர். இந்தக் கல்லூரியில் சர்வேஸ்வரஐயர், துரைசாமிசாஸ்திரிகள், சிதம்பரசாஸ்திரிகள், காவி உடை அணிந்த உருத்திர கோடீஸ்வரர், பண்டிதமணி க.சு நவநீதகிருஷ்ண பாரதியார் போன்ற சிவாச்சாரியர்கள் ஆசிரியர்களாக இருந்திருக்கின்றார்கள். மாணவர்கள் திருமுறைப் பாடல்களைபாடுவதற்கும்பாராயணம்செய்வதற்கும் திருமுறைப் பாடல்களின் தொகுப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களோடு பாடுவதற்கு தமிழ்நாடு இராமநாதபுரத்து ஓதுவார் குடும்பத்தைச் சேர்ந்த முத்து சுவாமி நியமிக்கப்பட்டு பணியாற்றியிருக்கின்றார். சிறப்பு வழிபாட்டு நாள்களில் வழிபாட்டின் காத்திரத்தை மனதில் பதிய வைப்பதற்காக, இறைவழிபாட்டில் இறுதியில் பழனிப் பஞ்சாமிர்தம் தேவாமிர்தமாக கொடுக்கப்பட்டது. ஆசார அனுட்டானங்கள் நுட்பமாகவும் நுண்மையாகவும் கவனிக்கப்பட்டன. மாணவர்கள் துடக்கு எனும் விதியை கட்டாயம் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

### பண்டித பயிற்சி மையம்

பண்டித பயிற்சியை வழங்குகின்ற நிறுவனமாக பரமேஸ்வரக்கல்லூரி இருந்திருக்கின்றது.

பரமேஸ்வரக் கல்லூரியில் குருவிற்கு முதன்மை கொடுக்கப்பட்டு தமிழ், ஆங்கிலம், வடமொழி என்பன போதனை செய்யப்பட்டிருக்கின்றன. சேர். பொன். இராமநாதன் அவர்கள் பரமேஸ்வரக் கல்லூரியை 'உயர்ந்த கல்வியின் உறைவிடமாகப்' போற்றினார். இவரது கனவு எதிர்காலத்தில் இங்கே ஓர் இந்துப் பல்கலைக் கழகம் அமைய வேண்டும் என்பதனைப் பலரும் எடுத்துக் கூறியுள்ளனர். இதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகி இந்துக் கற்கைகள் பீடம் 2019 இல் உருவாகியிருக்கின்றது. இது ஒரு கிடைத்தற்கரிய பேறெனலாம்.

இதனால் இங்கே கோயில் கொண்ட பார்வதி சமேத பரமேஸ்வரனுக்கு நன்றிப்பெருக்கோடு குடமுழுக்கு செய்யப்படுகின்றது. சிவனின் அருளாட்சி பாரதத்தின் வடக்கே காசிவிசுவநாதர் ஆலயத்திலும் பனாரிஸ் இந்துப் பல்கலைக்கழகத்திலும் இருப்பதுபோல் இலங்கையின் வடக்கே யாழ். பல்கலையிலமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் காணப்படுவது நோக்குதற்குரியது.

### அத்திபாரம்

பரமேஸ்வரக் கல்லூரியில் பரமேஸ்வரனுக்கு குடமுழுக்கு நடத்துவதற்கு சேர் பொன். இராமநாதனால் 1926 இல் அத்திவாரமிடப்பட்டது. 1928 இல் முதற் குடமுழுக்கானது நல்லூர் கார்த்திகேயக் குருக்களின் தலைமையில் நடைபெற்றது. வேதமந்திரங்களை ஓதி, துதி செய்து, சாம வேதத்தை இசையோடு பாடி, கிரியைகள் ஆத்ம திருப்தியோடு செய்தனர்.சிவாச்சாரியர்கள் வரிசையில் அச்சுவேலிக் குமாரசுவாமிக் குருக்கள், திருநெல்வேலி சபா நடேசக் குருக்கள், ஆனந்தநடேசக் குருக்கள், குஞ்சிதபாதக் குருக்கள் இதில் கலந்து கொண்டமை சிறப்பிற்குரியதாகும்.

சைவப்பெரியாரான இராமநாதன் அவர்கள் மந்திர லோபம், கிரியா லோபம், திரவியலோபம் நடைபெற வேண்டுமென விரும்பினார். அவர், அந்தணப் பெருமக்களுக்கு இந்த குடமுழுக்கில் பல்வேறு வகையான தானங்களைக் கொடுத்தமையைப் பார்க்கின்ற பொழுது 'திருக்குடத் திருமஞ்சனம்' என்கின்ற நைமித்தியக் கிரியைக்கு வழங்கிய செயற்பாட்டு ரீதியான முக்கியத்துவம் தெரிகின்றது.

### பல்கலைக்கழகம்

பரமேஸ்வரக் கல்லூரி 1974 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக மாற்றப்பட்டு 1979 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக விஸ்தாரமானது. இங்கேயுள்ள பரமேஸ்வரனின் இரண்டாவது குடமுழுக்கு 1991 வைகாசித் திங்கள் பிரதமகுரு நயினை சாமிநாத பரமேஸ்வரக் குருக்களின் தலைமையில் நடைபெற்றது. பரமேஸ்வரனை முன்னிறுத்தி தமது கருமத்தை பொறுமையுடன் செய்யும்போது அவரது பாதாரவிந்தங்களில் அடைய முடியும்.

1991 குடமுழுக்குடன் பரமேஸ்வரன் கோவில், மக்களுக்கான நிறுவனமாக தொழிற்படுவதற்காக பரமேஸ்வரன் கல்லூரி இயக்குனர் சபை, பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை,இந்துமன்றம்என்பனமலர்ச்சியடைந்து பல்வேறு சேவைகளை செய்தமையால் பரம்பொருள் இன்றுவரை பல்கலைக்கழகச்சமூகத்தையும், அவருடைய வழிபாட்டுடன் தொடர்புடைய வெளிச்சமூகத்தையும் காத்துக் கொண்டு இருக்கின்றார்.

பல்கலைக்கழக இந்து மன்றம் 1976 இல் பரமேஸ்வரன் கோவிலில் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களிற்கான ஆளுமைப் பரிமாணங்களை மேல் நோக்கி கொண்டு செல்லுதல், சமூக,கல்வி முன்னேற்றங்களைச் செய்தல், சமயவரன்முறைகளை வெளிக்காட்டுதல் போன்ற பல விடயங்களை பணிவுடன் சமூகத்திற்கு மேற்கொண்டுள்ளது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்த மற்றும் பஸிலைப் போன்று கோட்டாவும் மக்கள் பலத்தால் பதவிவிலகும் நாள் விரைவில்!

## ரில்வின் சில்வா ஆருடம்

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் பதவி விலகியமையைப் போன்று கோட்டாபய ராஜபக்ஷவும் தனது பதவியை இராஜிநாமா செய்யும் காலம் வெகு தொலைவில் இல்லை.

மக்கள் தமது பலத்தால் அவரை நிச்சயம் பதவி விலகச் செய்வார்கள். இதனை எவராலும் தடுக்க முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இராணுவத்தினர் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்கின்றமையும் அரசாங்கத்தின் ஒரு வழிமுறையாகும். இது பாதுகாப்பு துறையினருக்கும் மக்களுக்குமிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் செயற்பாடாகும்.

இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எமக்கு பாதுகாப்பு துறையினருடன் எவ்வித பிரச்சினையும் கிடையாது.

இந்த அரசாங்கத்தை பதவி விலக செய்வதே எமது இலக்காகும். அரசாங்கத்துக்கு அதிகாரத்தை வழங்கியவர்கள் மக்களாவர்.

எனவே அரசாங்கத்தை விட அதிகாரம் மிக்கவர்கள் மக்களே. அதன் காரணமாகவே பதவி விலக வேண்டும் என்ற எண்ணம் துளியளவும் இல்லாமலிருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவியை இராஜிநாமா செய்ய நேர்ந்தது. பஸில் ராஜபக்ஷவுக்கும் இதே நிலைமை ஏற்பட்டது.

அதே போன்று வெகுவிரைவில் கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டிய நிலைமை ஏற்படும். மக்கள் அவரை பதவி விலக செய்வார்கள். இதனை எவராலும் தடுக்க முடியாது. அவரை பதவி விலக செய்வதற்காக முன்னெடுக்கப்படும் போராட்டங்களை முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின் அதனை எதிர்கொள்ளும் திறன் எமக்கிருக்கிறது.

இதன் ஓர் அங்கமாகவே அரசாங்கம் தற்போது புலிகள் விவகாரத்தைக் கையிலெடுத்திருக்கிறது. அரசாங்கத்துக்கு எதிராக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் போது, திடீரென புலிகள் தலை தூக்குவார்கள். இது மிகவும் பழைய வழிமுறை என்பதை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றோம். இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றி தற்போது மக்களை ஏமாற்ற முடியாது.
– என்றார்.



# சதொசவில் பொருள் கொள்வனவுக்கு கிண்ணியாவில் மக்கள் நீண்டவரிசை





கிண்ணியா கச்சக்கொடித்தீவில் உள்ள சதொச விற்பனை நிலையத்தில் பொருள் கொள்வனவு செய்ய மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக நீண்ட வரிசையில் காத்திருந்தும் இதனை பெற்று வருகின்றனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இவ்வாறு மக்கள் அத்தியாவசிய பொருள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

ஒவ்வொருவருக்கும் ஒரு கிலோ கிராம் சீனி , அரிசி, மா என வழங்கப்பட்ட போதிலும் மக்கள் இதனை விடக் கூடுதலாக வழங்க வேண்டும். மிக நீண்ட நேர காத்திருப்புக்கு இது போதாது எனவும் தெரிவிக்கின்றனர்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கிறது

கடந்தமாதம் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஜூன் மாதத்தில் 32 ஆயிரத்து 865 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இது முன்னைய மாதங்களை விட சற்று அதிகம் என இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. மே மாதத்தில் 30 ஆயிரத்து 207 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர் என இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 6 ஆயிரத்து 550 சுற்றுலாப் பயணிகளும் பிரிட்டனிலிருந்து 3 ஆயிரத்து 199 சுற்றுலாப்பயணிகளும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்,ஆஸ்திரேலிய இலங்கை கிரிக்கெட் தொடர் காரணமாக 2 ஆயிரத்து 448 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றின் பின்னர் மார்ச் மாதமே அதிகளவு சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

# வரலாற்று நெறியில் .....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இராமநாதனின் சிந்தனை**

சேர். பொன். இராமநாதன் அவர்கள் சமயமும் கல்வியும் அவிச்சின்னமாக (தொடரிழையாக) தொடர்ந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து பரமேஸ்வரக் கல்லூரியில் அரிச்சுவடியோடு அறச்சுவடியும் பின்னிப்பிணைந்திருந்தால் மாணவர்களின் கல்விச்செல்நெறி திறம்படும் என்பதில் ஆணித்தரமாக இருந்தார். முழுமையான பக்தியும், சமயமும் ஒழுக்கமுமில்லாத கல்வி வெறும் வாசனை இல்லாத பூக்களை ஒத்தது. சுய அறிவும் செயலும் ஒன்றுபட பரமேஸ்வரன் கோவிலைக்கட்டிய இராமநாதன் மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தை பரமேஸ்வரனின் வழிகாட்டுதலோடு இருக்க வேண்டும் என்பதை தீர்க்கதரிசனத்தோடு உணர்ந்திருக்கிறார். எனவே நாமும் உணர்ந்து அறிந்து பரமேஸ்வரனை நிதமும் நினைக்க வேண்டும். 'தவமணமும் திருநீற்றின் தன்மணமும் தவறாத சிவமணமும் பெருகக் கல்வி வளர்கின்றது' என்ற காஞ்சிப் பெரியவரின் கூற்றை வைத்துப் பார்த்தால் பார்வதி பரமேஸ்வரனை தியானித்துச் சிவத்தை உள்வாங்கி விபூதியை நெற்றியில் அணிந்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டால் கட்டாயம் சிவம் எங்கும் எதிலும் தெரிந்து ஆன்மிகம் எமது உள்ளத்தில் புலப்படும்.

**மூன்றாவது குடமுழுக்கு**

பரமேஸ்வரப் பெருமானது மூன்றாவது குடமுழுக்கானது 2022 இல் சிவஸ்ரீ க.ச சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறுகின்றது. பரமேஸ்வரனது ஸ்தூல லிங்கமாகிய மூன்று நிலைக் கோபுரம் அருகே இருமணிக்கூட்டுக் கோபுரத்தோடு முத்தாய்ப்பாக சேர்கின்ற போது ஒலி ஒளியின் வீச்சு பார்வதி பரமேஸ்வரனிடத்தில் பல்கலைக்கழகத்தினரையும், மக்களையும் ஆத்மார்த்தமாகத் தொழ வைக்கின்றது. ஆலயத்தினுள்ளே விநாயகர். ஸ்ரீ பார்வதி உடனுறை பரமேஸ்வரன், முருகன், வைரவர், நவக்கிரகங்கள் என்போருக்கான விக்கிரகங்கள் நிலைநிறுத்தப்பட்டு குடமுழுக்கின் பின் காட்சி தருவது எங்களை குடும்பத்தோடு சென்று மனதிலேயே 'நிற்பனவும் நிலைப்பனவுமாக' வழிபாடு செய்ய வைக்கின்றது.

ஆத்மார்த்தம், பரார்த்தம் ஆகிய பூசைகளுக்கு நந்தவனம் முக்கியமானது என காரணாகமம் தெரிவிக்கின்றது. பரமேஸ்வரன் சூழலிலே நந்தவனம் புதிதாக அமைக்கப்படுகின்றது. சிறிது காலத்தில் தன்னை ஒளியூட்டி கண்திறந்து பரமேஸ்வரனின் பாதாரவிந்தங்களில் பூக்கள் செல்கின்றபோது பூசைத் தத்துவம் மேன்மை பெறுகின்றது.

**மலர் வெளியீடு**

பரமேஸ்வரக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறியதன் பின்னர் 02.06.1991 இல் நடைபெற்ற இரண்டாவது குடமுழுக்கின் நினைவாக 'பரமேஸ்வரம்' என்கின்ற காத்திரமான மலரினை வெளியிட் டது.

இதேபோல இன்று 06.07.2022 இல் நடைபெறுகின்ற மூன்றாவது குடமுழுக்கின் ஞாபகார்த்தமாக சிறப்பு மலரினை வெளியிடுவது சிறப்பான இறைகைங்கரியமாகும்

ஆறுமுகநாவலர் அவர்களின் வழிபடு தெய்வமான வண்ணை வைத்தீஸ்வரனிற்கும் வைத்தீஸ்வரக் கல்லூரிக்குமிடையிலான தொடர்பை போன்றது நாவலர் வழியில் வந்த சேர். பொன். இராமநாதன் அவர்களால் வணங்கப்பெற்ற பரமேஸ்வரனுக்கும் அப்பெருமானாரின் காலத்தின் அடியாக வந்த பரமேஸ்வரக் கல்லூரிக்குமிடையிலான தொடர்பாகும். இந்த குடமுழுக்கானது இருண்ட யுகத்தில் இருக்கும் எம்மை வெளிச்சமான உலகிற்கு திரும்புகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது நிறைவான பிரார்த்தனையாகும்.

**'கருதற்கரியசிற்சபையில்ஆனந்தநர்த்தனமிடும்**
**கருணாகரக் கடவுளே**
**திரிகரணசுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்'**
**எனும் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் அருங்கூற்றும் மெய்யானதே.**



# சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட மஞ்சள் மீட்பு

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை வெட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஒருதொகை மஞ்சளும் கிருமிநாசினியும் திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 66 ஆவது படைமுகாம்களின் இராணுவத்தினரால் மீட்க்கப்பட்டு பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் பொருள்கள் கொண்டு வரப்பட்ட தகவல் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 65 பெரிய பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் கிலோ மஞ்சளும், 03 பைகளில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மஞ்சள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் தொகை இந்தியாவில் இருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளைப் பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்

அங்கம் 56



- செல்லத்துரை ரவீந்திரன் -

இன்று காலிமுகத்துடலின் தார் மீகங்களில் தமிழ் மக்களுக்கு நடத்தப்பட்டவை குறித்துப் பேசப்படுகின்றன.

அவை தமிழ் மக்களின் உணர்வுகளை மட்டுமல்லாமல், எல்லாவித மக்களினதும், சிங்களப் பேரினவாதிகளினதும் உணர்வுகளைக் கூட தாண்டியவை. ஆனால் அது பேரினவாதத்தின் பின்னணியில் நடை



போடக்கூடிய பாதையை கொண்டவை. அதனை காலிமுகத்திடலின் போராளிகள், முக்கியஸ்தர்கள் மற்றைய எதிர்த்தரப்புக் கட்சிகளுடன் சில நாள்களுக்கு முன் நடத்திய சந்திப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். அந்த சந்திப்பைப்பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது முகநூலில் 30 ஜுன் 2022 இட்ட பதிவிலிருந்து நாம் கணக்கெடுக்க முடியும். அதை அப்படியே இங்கே தருகிறேன்:–

**மனோ கணேசன் கூறுபவை**

நேற்று மாலை, எதிரணி எம்பிகளுக்கும், 'கோட்டா – கோ – கம' போராட்ட குழுக்களுக்கும் இடையில் ஒரு கலந்துரையாடல் சந்திப்பு நிகழ்ந்தது.

ராஜித சேனாரத்ன எம்.பி., சர்வ கட்சிப் போராட்டக்குழுவினர் ஆகியோர் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

சுவாரசியமாகவும், கரடு முரடாகவும் இந்நிகழ்வு நிகழ்ந்தது.

நானும், நண்பர் சுமந்திரனும் இருந்தோம். தவிர ராஜித, ரிஷாத், திகா, ராதா, தயாசிறி, சம்பிக்க, அனுர பிரியதர்ன, சந்திமல் வீரக்கொடி, திஸ்ஸ ஆகியோர் உட்பட பலர் கலந்தனர்.

ஆரம்பத்தில் ரத்தின ஆமதுரு எம்.பியும் அங்கே காணப்பட்டார். இவர் இங்கே என்ன? என நான் யோசித்த போதே, "அவசர வேலை" என்று சொல்லி அவர் போய் விட்டார்.

ரத்தின ஆமதுரு எம்.பிக்கு அழைப்பு இல்லை, சுயமாக வந்தார், ஆகவே போகச் சொல்லி விட்டோம் என்று கூறி, உரையாடலை ஒருவழி



யாக தாமதமாக போராட்ட குழுவினர் ஆரம்பித்தனர்.

ஏற்பாட்டு கோட்டா – கோ – கம போராட்ட குழு, ஒரு 10 அம்ச சிங்கள ஆவணம் ஒன்றை எமக்கு தந்திருந்தது. தமிழில் இல்லை, சொறி என்றார்கள்.

உரையாடல், ஆரம்பிக்கப்பட்டதுமே, அங்கிருந்த கோட்டா – கோ – கம போராட்ட குழுக்கள் மத்தியில் வாத பிரதிவாதங்கள் ஏற்பட்டன. 'நாம் அப்படி, நீர் எப்படி' என்றும், இந்த ஆவணத்தை முழுக்க ஏற்க முடியாது என்றும், 20 வீதம் ஏற்கலாம், 80 வீதம் ஏற்க முடியாது என்றும் குழுவினர் தங்களுக்குள் வாதிட்டனர்.

நாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தோம். பிறகு சம்பிக உட்ட சில எம்.பிக்கள், வேறு வேலை உள்ளது என கூறி இந்நிகழ்வுக்கு ஆதரவை கூறிவிட்டு போனார்கள்.

கோட்டா – கோ – கம போராட்ட குழுக்களுக்கள் ஒவ்வொருவரும், தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். அதிலும் குழுக்களுக்குள் முரண்பாடு ஏற்பட்டது.

கடைசியில், "கோட்டாபயவை விரட்டுவோம், அவருடன் எந்த 'டீலும்' செய்யக் கூடாது என்ற குறைந்தபட்ச உடன்பாட்டில் ஏனைய விடயங்களை பிறகு பார்ப்போம்" என்று கூறி, உரைகள் ஆரம்பமாயின.

அதன்பிறகு, போராட்டக்குழு உறுப்பினர்கள் பேசினார்கள். இதில் சிலர், அங்கிருந்த எம்.பிகளை கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்து விட்டனர்.

"எமது போராட்டம் கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டும் போராட்டம். இப்படி காலத்துக்கு காலம் நாட்டில் போராட்டங்கள நிகழ்ந்துள்ளன. அவை காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் தமிழ் இளைஞர்களின் போராட்டமும் அப்படிதான். உங்களுக்கு மறுவாழ்வு கொடுக்க எமக்கு முடியாது.

"இங்கே இருக்கின்ற எல்லோரும் ராஜபக்ஷவுடன் அரசியல் செய்தவர்கள், ராஜபக்ஷவை மீண்டும் பதவிக்குக் கொண்டுவரப் பாடுபட்டவர்கள். தமிழ்கூட்டமைப்பைதவிர எல்லோரும் ஒன்றுதான்." – என ஒரு காலிமுகத் திடல் போராளி (பெயர் வேண்டாம்..!) உச்ச தொனியில் பேசினார்.

நான் இடைமறித்து "நான் ஒரு போதும் ராஜபக்ஷவுடன் அரசியல் நடத்தியவன் அல்லன்" என்று சொன்னேன். அப்போது முதலில் பேசியவர், "மன்னிக்கவும், உங்களை எமக்குத் தெரியும். நான் உங்களைச் சொல்லவில்லை. இங்குள்ள ஏனையோரைச் சொன்னேன்" – என்றார்.

நான் தொடர்ந்து சொன்னேன்.

"தம்பிகளா, உங்கள் உணர்வுகள் மெச்சத்தக்கவை. உங்கள் போராட்டம் வெல்ல வேண்டும். அதன்மூலம் மாற்றம் வர வேண்டும். அந்த மாற்றம் முற்போக்கான மாற்றமாக வர வேண்டும்.

"நாம் இந்நாட்டில் ஜனாதிபதியாக, பிரதமராக வரவேண்டி அரசியல் செய்யவில்லை. அரச பயங்கரவாத இனவாதத்துக்கு எதிராக எங்கள் மக்களை நாம் பிரதிநிதித்துவம் செய்கிறோம்.

"கோட்டாபய, பலமான பாதுகாப்பு செயலாளராக இருந்த போதே, நான் அவரை எதிர்த்து போராட்டம் செய்தவன்.


"கோட்டாபயவை விரட்டுவோம், அவருடன் எந்த 'டீலும்' செய்யக்கூடாது, என்ற முதல் நிபந்தனையை, இணைந்து வேலை செய்வற்காக,



இங்கே எல்லோருக்கும் நீங்கள் கூறினீர்கள். நல்லது. நாம் அதற்கு 200 வீதம் உடன்படுகிறோம்.

"எமக்கும் உங்களுடன் சேர்ந்து வேலை செய்ய ஒரு நிபந்தனை உள்ளது. அதை என் பக்கத்தில் அமர்ந்துள்ள நண்பர் சுமந்திரனும் ஏற்றுக் கொள்வார் என நான் திடமாக நம்புகிறேன்.

"எம் நிபந்தனை இதுதான். நம் நாடு, பல மொழி பேசி, பல மதங்கள் கடை பிடிக்கப்பட்டு, பல இனங்கள் வாழும் பன்மைத்துவ நாடு. இது, ஒரு சிங்கள பௌத்தம் மட்டும் என்ற நாடு அல்ல. இது சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க நாடு. இன்னும் எவ்வளவோ இருக்கு. ஆனால், நீங்கள் முதற்கட்ட அடிப்படையாக, இந்த பன்மைத்து



வத்தை ஏற்க வேண்டும். கோட்டாபயவை விரட்ட நாம் சேர்ந்து வேலை செய்வோம்.

"ஏனெனில் நாம் தோற்கடிக்க எண்ணுவது, கோட்டாபய ராஜபக்ஷ என்ற தனி நபரை அல்ல. ராஜபக்ஷர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அந்த பேரினவாத கொள்கையைத்தான்." – என்றேன்.

இதற்கு அங்கிருந்த காலிமுகத் திடல் போராளிகள் உடனடியாகப் பதில் எதுவும் கூறவில்லை. இல்லை, அதை ஏற்க மாட்டோம் என்றும் கூறவில்லை. ஆனால், என் கருத்தை அமைதியாக கேட்டுக்கொண்டார்கள்.

எமது அணியில் அமர்ந்திருந்த சிங்கள எம்.பிகளும் ஒன்றும் கூறவில்லை.

நான் பேசி விட்டு வேறு வேலை காரணமாக இடையில் கிளம்பி வந்து விட்டேன்.

கிளம்பும் முன், நான் நண்பர் சுமந்திரனிடம் ஒரு யோசனையை முன் வைத்தேன். இந்தக் காலிமுக திடல் போராளிகளுடனான உரையாடலை தமிழ் தேசிய கூட்டமைப்பும் (TNA), தமிழ் முற்போக்கு கூட்டணியும் (TPA) ஒருமித்துக் கையாள்வோம். இந்த அவகாசத்தை பயன்படுத்துவோம். நாம் சில அடிப்படைகளை எழுத்து மூலம் தயாரித்து அவர்களுக்கு வழங்குவோம்.

என் கருத்தை சுமனும், என்னருகில் இருந்த ராதாவும், திகாவும் உடன் ஏற்றுக்கொண்டனர். எனினும் நாம் கட்சி ரீதியாகக் கூடி இதுபற்றி அதிகாரபூர்வமாக முடிவெடுக்க வேண்டும். அதை நாம் செய்வோம். நண் பர் சுமந்திரனும் செய்வார் என எதிர்பார்க்கிறேன்.

– இப்படி மனோ கணேசன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவை, எவற்றை நமக்குக் கோடி காட்டுகின்றன?

(வளரும்...)



# இந்திய ரசிகர்கள் மீது இனவெறிப் பாய்ச்சல் இங்கிலாந்து ரசிகர்கள் அத்துமீறினர்

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான தொடரின் இறுதி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 378 ஓட்டங்களை வெற்றி இலக்காக இந்தியா நிர்ணயித்தது.

தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தது. நான்காவது நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 259 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

இந்தநிலையில் நேற்றைய நான்காவது நாள் ஆட்டத்தின்போது இந்திய ரசிகர்கள் மீது இன ரீதியாக வார்த்தைப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. மைதானத்தில் இங்கிலாந்து ரசிகர்கள் இன வெறியுடன் தங்களைத் திட்டியதாக சில இந்திய ரசிகர்கள் புகார் அளித்துள்ளனர். இந்த இனவெறிக் குற்றச்சாட்டு குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை உறுதி அளித்துள்ளது.

# பிரவீன் ஜெயவிக்ரமவுக்கும் கொரோனாத் தொற்று




ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவருகிறது. ரி – 20 மற்றும் ஒருநாள் தொடர் முடிவடைந்த நிலையில் டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட்டில் ஆஸ்திரேலியா அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது. இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜூலை 8 ஆம் திகதி தொடங்கவிருக்கிறது.

இந்த நிலையில் மேலும் ஒரு இலங்கை வீரருக்கு கொரோனாத் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டியின்போது மத்யூஸ் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். அவரைத் தொடர்ந்து இடது கை சுழல்பந்து வீச்சாளரான பிரவீன் ஜெயவிக்ரமவுக்கும் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. இதனையடுத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என இலங்கைக் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# வெளிநாட்டு டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் 69 ஆண்டுகால சாதனையை முறியடித்த ரிஷப் பண்ட்

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையிலான தொடரின் இறுதி டெஸ்ட் போட்டி பேர்மிங்காமில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்சில் இந்திய அணி 416 ஓட்டங்களைப் பெற்றது. ரிஷப் பண்ட் 146 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 104 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இரண்டாவது இன்னிங்சில் இந்திய அணி 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. புஜாரா 66, ரிஷப் பண்ட் 57 ஓட்டங்களை எடுத்தனர். இந்த டெஸ்ட் போட்டியில் ரிஷப் பண்ட் முதல் இன்னிங்சில் 146, இரண்டாவது இன்னிங்சில் 57 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதன் மூலம் வெளிநாடுகளில் இந்திய அணி விளையாடிய டெஸ்ட் போட்டியொன்றில் அதிக ஓட்டங்களைப் பெற்ற இந்திய விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் 1953 ஆம் ஆண்டு விஜய் மஞ்சரேக்கர் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக கிங்ஸ்டன் டெஸ்ட் போட்டியில் 161 ஓட்டங்களை அடித்திருந்ததே இந்திய சாதனையாக இருந்தது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் மொத்தமாக 203 ஓட்டங்களை எடுத்துள்ள ரிஷப் பண்ட், 69 ஆண்டுக்குப் பின்னர் விஜய் மஞ்சரேக்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.




# விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் பிரிவுத் தொடரில் ரபேல் நடால், கிர்கியோஸ் காலிறுதிக்கு முன்னேறினர்





லண்டனில் நடந்து வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரின்ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான நான்காவது சுற்று ஆட்டமொன்றில் உலகின் முன்னணி வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், நெதர்லாந்தின் வான் டெ சாண்ட்சல்பைச் சந்தித்திருந்தார். இந்தப் போட்டியில் 6-4, 6-2, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்ற நடால் காலிறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு நான்காம் சுற்றுப் போட்டியில் ஆஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோஸ், அமெரிக்காவின் பிராண்டன் நகஷிமாவுடன் மோதியிருந்தார். அந்தப் போட்டியில் 4-6, 6-4, 7-6, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார் கிர்கியோஸ்.

# விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் பிரிவு ஹாலெப், ரிபாகினா காலிறுதியில்



விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்றில் ரோமானியா நாட்டின் சிமோனா ஹாலெப், ஸ்பெயின் வீராங்கனையான பவுலா படோசாவுடன் மோதியிருந்தார். அதில், 6 – 1, 6 – 2 என்ற நேர் செட்களில் ஹாலெப் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் கசகஸ்தானின் எலினா ரிபாகினா, குரோஷியாவின் பெட்ரா மார்க்கை எதிர்கொண்டிருந்தார். அந்தப் போட்டியில் 7 – 5, 6 – 3 என்ற நேர் செட்களில் வென்ற ரிபாகினா காலிறுதிக்குள் நுழைந்துள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.07.2022இல் வெளியிடப்பெற்றது.